கலாசிந்தாமணி

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு "

—திருக்குறள்.

புத்தகம் 3	காளயுக்தி௵ புரட்டாசிமீ ஆகஸ்டுமீ 1918	சஞ்சிகை 12

கடவுள் வணக்கம்.

அன்பின்வழியறியாத வென்னைத்தொடர்ந்தென்
    னை யறியாதபக்குவத்தே
யாசைப்பெருக்கைப் பெருக்கிக்கொடுத்துநா
    னற்றேனலந்தேனென
வென்புலமயங்கவே பித்தேற்றிவிட்டா
    யிரங்கியொருவழியாயினு
மின்பவெள்ளமாகவந் துள்ளங்களிக்கவே
    யெனைநீகலந்ததுண்டோ
தன்பருவமலருக்கு மணமுண்டுவண்டுண்டு
    தண்முல்கைதனக்குமுண்டோ
தமியனேற்கிவ்வணந் திருவுளமிரங்காத
    தன்மையாற்றனியிருந்து
துன்பமுறினெங்ஙனே யழியாதநின்னன்பர்
    சுகம்வந்துவாய்க்குமுறையாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
    சோதியேசுகவாரியே.

தாயுமானவர்:—

1336-ஞு துல்ஹஜ்ஜ-மீ 1918-ஞு செப்டம்பர்—அக்டோபர்மீ.

		கே.	குரு
	4-வி-செ 11-க-புத 14-க-சு 29-து-பு		ச.
	செ ராகு.		சூ பு. சு

காளயுக்தி ஞு புரட்டாசி மீ

தக்ஷிணாயணம் வருஷருது	பசலி 1327 1328	சாலி 1840
கொல்லம் 1093.	கலியுகம் 5019	ஹிஜரி 1336

யோ	ஹி	இங். மீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
சி	11	17	1	செ	துவா 46-51 திருவோ 39-39 ரா 18-50.
பி	12	18	2	புத	திர 42-39 அவி 37-24 ரா 24-13. [விரதம்.
ம	13	19	3	வியா	சதுர் 37-42 சத 34-22 ரா 19-10 அ. ப.
சி	14	20	4	வெ	○பருவம் 32-10 பூரட் 30-46 ரா 22-58-
சி	15	21	5	சனி	பிர 26-17 உத்திரட் 26-46 ரா 24-30.
அ	16	22	6	ஞா	துவி 20-12 ரேவ 22-35.
சி	17	23	7	திங்	திரி 14-18 அசு 18-24 தி 9-5 ரா 10-46.
சி	18	24	8	செ	சௌ 8-17 பர 14-30 * கிரு ரா 12-43.
அ	19	25	9	புத	பஞ் 2-50 சஷ் 55-0 கிரு 11-0 கபிலசஷ்டி.
உ	20	26	10	வி	ஸப் 53-47 ரோ 8-8 தி 21-39.
சி	21	27	11	வெ	அஷ 50-42 மிரு 6-4 தி 26-40
சி	22	28	12	சனி	நவ 48-38 திருவா 4-57 ரா 5-3.
சி	23	29	13	ஞா	தச 46-53 புனர் 4-58 தி 25-2.
சி	24	30	14	திங்	ஏகா 48-26 பூசம் 6-10 ரா 9-40 ஏகாதசி.
சி	25	1	15	செ	துவா 50-9 ஆயி 8-38 ரா 10-40.
சி	26	2	16	புத	திர 53-8 மக 12-18 ரா 4-4. [த்ரி.
சி	27	3	17	வியா	சதுர் 57-10 பூரம் 17-4 ரா 7-4 மாதசிவரா
சி	28	4	18	வெ	●அமா 60-0 உத்தி 2-45 ரா 16-17 மாளய
ம	29	5	19	சனி	●2-7 ஹஸ் 29-4 ரா 21-37. [அமாவாசை-
சி	30	6	20	ஞா	பிர 7-22 சித் 35-38 ரா 21-31 நவராத்ரிஆர
		7	21	திங்	துவி 12-30 சுவா 42-0 ரா 27-46. [ம்பம்.
அ	1	8	22	செவ்	திரி 17-13 விசா 47-47 ரா 29-4.
ம	2	9	23	புத	சௌ 21-0 அனு 52-44 சித்தயோகம்.
அ	3	10	24	வி	பஞ் 24-4 கேட் 56-32 திரி 7-33.
பி	4	11	25	வெ	ஷஷ் 25-41 மூல 59-9 தி 17-21 ரா 25-25.
அ	5	12	26	சனி	சப் 26-4 பூரா 60-0 தி 23-21. [சரஸ-பூஜை.
சி	6	13	27	ஞா	அஷ 25-8 உத்திரா 59-58 தி 20-0.
அ	7	14	28	திங்	நவ 23-2 திருவோ 59-15 ஆயுதபூஜை.
அ	8	15	29	செவ்	தச 19-51 அவி 57-6 தி 8-53.
சி	9	16	30	புத	ஏகா 15-45 சத 54-12 தி 14-13.
சி	10				

(Vertical labels in the date columns: புரட்டாசி-மீ beside Tamil dates 2–9; அக்டோபர்மீ 1918- beside English dates 2–9 of October; முஹர்ரம்-மாதம் beside Hijri dates 1–7.)

அன்பு

உடலின் பயனாகிய உள்ளன்புடைமை மனதுக்கு இன்பமாயிருக்கும். ஒருவரிடத்தில் அல்லது ஒன்றில் வைக்கப்பட்ட அன்பானது, அவ்வன்புக்கு இலக்கான பொருள் துன்பமடைந்த காலத்து அன்புடையாரை மனோ வேதனைக் குள்ளாக்கும். சில சந்தர்ப்பங்களில் அன்பு களவு பொருள்போலப் பிறரறியாது மறைத்து வைக்கப் படுவதுண்டு. சில வேளைகளில் அன்பு வைக்கப்படும் பொருள் தான் இன்னாரின் அன்புக்கு உரிமையாயிருக்கிறேனென்று அறியாதபடியிருக்க, அன்புவைப்பவர் ஒருவரே தனது அன்பைத் தன்னுள்ளடக்கி வைத்திருப்பதுமுண்டு. இந்நேரங்களில் அவ்வன்பு வெளிப்பட வேண்டுவதாயின், அன்புவைக்கப் பட்டபொருள் துன்பமான நிலையிலிருப்பது அன்புடையா ரறியவேண்டும். வைக்கப்பட்ட அன்பு உண்மையான அன்பாயின் தவறாது வெளிப்பட்டுவிடும். இதனாலன்றே,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்." எனப்பொது மறைவிதந்து புகல்வதாயிற்று.

காதலரிருவர் கொண்ட மறைவான அன்பைக் கண்டு பிடிக்கப் புகும்பொழுது, அவ்வொருவர் முன்னிலையில், "இன்ன தன்மையரை ஒரு கொடியபுலி அறைந்து உயிர் கொண்டது ஐயோ!" என்று இரங்கி ஆவலித்துச் சொல்லியவளவில், மற்றவர் ஏங்கி வெய்துயிர்த்து உடனே உயிர்விடுந் தலையன்புடையவராகையால், அவர் முன்னிலையிற் சிரித்துப் பரிகாசமாகச்சொல்வர் இவர்களிட முள்ளகளவான அன்பைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று விரும்புபவர். இன்றேல் விபரீத மாகும்.

உண்மை யன்புடையவர் தான் அன்புவைத்த பொருள் எதுவோ அது சிறப்புறுதலையே விரும்புவர். தனக்கு என்ன இன்னல் வரினும் அதனை இலக்ஷியஞ் செய்யார். போலியன்புடைய பரத்தையில் உண்மையான அன்பு கொண்டொழுகும் ஆடவன், தான் எவ்வித இன்னல் அனுபவிக்கினும் அவள் சிறப்பாக விருத்தலை விரும்புவது இயல்பே. மனிதர்கள் அதிகமாக மங்கையர்களில் தான் கூடிய அன்புவைத்திருப்பது சகஜம்.

படிப்படியே புத்திர சுற்றத்தாராதியரில் பின் னன்புவைக்கப்பட வேண்டும். அஞ்ஞானத்தில் இயல்பாய் அழுந்தியிருக்கும் ஆன்மாக்களின் மீதன்பு வைத்து ஒரு கைம்மாறுங் கருதாது காக்குங்கருணை கடவுளிடத்து அநுதியே யுள்ளது. இத்தகைய கருணைவள்ளலிடத் தன்றோ நாம் முதன்மையான அன்பு வைக்கவேண்டும்.

"பொருளாசை பெண்ணாசை பூவாசை யென்னு மருளாசை யாமாசை மாற்றித்-தெருண்ஞான வேந்தராய் வாழலாமெய்யன்பானன் னெஞ்சே பூந்தராய் நாதரைநீ போற்று." என்று பட்டினத் தடிகளென்னும் பெரியார் உபதேசத்தைப் பொருட்படுத்த வேண்டாமா? இந்தப்படி நடந்தாற்றான் நமக்கு உய்வுண்டு. இத்தகைய கடவுளில் முதன்மையான அன்புவைத்தவர் கண்ணப்ப நாயனார். இவருடைய உருவம் அன்புருவேயன்றி என்புதோல் இறைச்சியல்ல. இதனால்தான், "அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கலன்பு." என்று காளத்தி நாதர் திருவாய் மலர்ந்தருளினர். இடையர்களெல்லாம் பிரயோஜன மில்லாத பசுக்களைப் பரிபாலிக்க மாட்டார்களென்று ஆபால கோபால நியாயம் சொல்லுகின்றது. ஒருவாற்றானும் ஒருபலனுங் கொடுக்கக் கூடாத வரட்டுப் பசுக்களாகிய எம்மை பசுபதியானவர் தமது கருணையினாற் காக்கிறார். சாயுச்சியத்திலும் அப்பகவானுக்கு மீளா அடிமைகளாயுள்ள நாம், 'அன்பினான் மூர்ச்சித்தவன்பருக்கங்ஙனே அமிர்த சஞ்சீவிபோல் வந்து ஆனந்தமழை' பொழியும் எம்மையனடியிணைகளில் அநுதினமும் நீங்காதஅன்புவைத் துய்வோமாக.

போ. நடராஜன்,
மேலைப்புலோலி.

ஜீவ காருண்யம்

"தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்கிற்பார் விழுமியோர்"

அயலார் வருந்த நாம் வாளாவிருப்பது நமக்கழகன்று. செய்யாமற்செய்த உதவிக்கு வையகமும் வானுலகும் மாற்றலரிதன்றோ? பிறருக்கு உபகாரஞ்செய்தால் நமக்குப் பெருமை

யும் நன்மையும் விளையும். மானிடர் ஈவு, இரக்கம்,பச்சாதாபம், பூததயை, ஜீவகாருண்யம்,தர்மசிந்தனை, பரோபகாரம் முதலிய நற்குண விசேடங்களுடன் துலங்கவேண்டும். 'அஹிம்ஸா பரமோதர்ம:' என்றபடி வாயில்லா மிருகங்களாகிய பசுமாடுகளையும் ஈ யெறும்பு முதலிய பூச்சிகளையும் துன்புறுத்தலாகாது. 'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க, தான் பிறிதின்னுயிர் நீக்கும் வினை, பாண்டியதேயத்தில் வீதி விடங்கன் அரசாட்சியில் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஒருதன்மையதான பக்ஷபாதமின்றிய நியாயத் தீர்ப்புகள் பிறந்தன. ஓர் நாள் இளவரசன் பவனிசெல்வதின் நிமித்தமாக ரதத்தில் ஆரோகணித்துச் செல்லுங்கால் ஓர் பசுவின் இளங்கன்று தேர்ச்சக்கரங்களிடையே சிக்குண்டு விழுந்திறந்தது. அதைக்கண்ட தாய்ப்பசு ஆவிபதறி அம்மாவென்றலறி துடிதுடித்து ஓடி அரண்மனைவாயிற் புறத்தில் கட்டியிருக்கும் ஆராய்ச்சிமணியை தன் கோட்டினலசைத்தது. விஷயம் தெரிந்துகொண்ட தர்ம சீலனுகிய வீதி விடங்கன் ஆகுலமடைந்து மறையோர் சபையின் தீர்மானப்படி தன் மகனை வீதியிற்கிடத்தி அவன்மீது தேரைச் செலுத்தி விடும்படி தன் அமைச்சனுக்கு ஆக்ஞாபித்தான். அவனோ ஜீவ காருண்யமுடையோனுதலால் அரயன் கட்டளை நிறைவேற்றுது தற்கொலை புரிந்துகொண்டான். அதையறிந்த பூபதி தன் மகனை வீதியிற்கிடத்தி தானே அவன்மீது இரதத்தைச் செலுத்தினுன். ஆதலால் ஜீவகாருண்யமே சிறப்புடைத்து. அன்றியும் சிபிசக்கரவர்த்தி தன்னை அடைக்கலம் புகுந்து அபயப்ரதானம் வேண்டிய புறுவின் பொருட்டாக (உருமாறி துறத்திவந்த யமனுகிய) பருந்துவேண்டியபடி தன் உருப்புகளை அறுத்தறுத்து திராசிலிட்டு பிறகு பருந்துக்கு சமான இடையாக தானே தராசில் நின்றுனன்றோ? அவ்விதமே ததீசிமுனிவர் தமது முதுகென்பை யீந்தார். அறியாத்தன்மையாலும் துஷ்டசகவாசத்தாலும் சில சிறுவர் சிறுமியர் வண்டு தும்பிமுதலிய ஜீவன்களை ஹிம்ஸிக்கிறுர்கள். அப்படிச் செய்வது மஹாபாவம். ஆனல் சுயபுத்தியின்றியும் அயலார்சொல்லும் புத்திமதியையும் கேட்காமலும் 'தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்று மர்க்கட முஷ்டியாக விதண்டாவாதமாய் ஜீவஹிம்ஸை செய்கிறவர்களுக்கு யாது செய்வது? அப்படிப்பட்டவன் ஒருவன் தனது மாட்டை ஓயாமல் கருணையின்றி ஓர் கழிகொண்டு அடிக்கும்

போது யாராவது பக்கத்திலிருப்பவர் 'ஏனப்பா பாவம்! வாயில்லாஜீவனை இப்படி அடிக்கிறாய்?' என்று கேட்டால் அவன் 'போ அய்யா உன் வேலையைப்பாரு என்மாட்டைநான் அடிக்கிறேன். நீ என்ன கேட்கிறது?' என்று பதிலுரைப்பான்.

மன்பதைகளுக்கு திரிகரண பரிசுத்தி அத்யாவசியமானது. நாம் மனம், வாக்கு, காயங்களில் பரிசுத்தமாயிருக்க வேண்டும். நற்குணம் பொருந்தி நல்ல எண்ணங்களைக் கொள்ளல் வேண்டும். ஜீவகாருண்யத்துடனிருக்க வேண்டிய தென்கிற எண்ணத்துடன் நிறுத்திவிடப்படாது. அந்தர் முகமாயேற் பட்ட பரோபகார சிந்தனைகளை பகிர்முகமாக இங்கிதமொழி, பிரியவசனம், முதலியவைகளால் வெளிப்படுத்தவேண்டும். அன்றியும் அவ்விதமே செய்து காட்டவேண்டும். நம் எண்ணப் படி நாம் நடத்தாது விடுவது நமக்கு சம்பிரதாயமாய்விட்டது. மேலும் சொற்படி நடப்பதும் கஷ்ட சாத்தியந்தான். என்று னும் கூட்டியமட்டில் வாக்கினாலோ கிரியையினாலோ நாம் பிறர்க்கு உபகரிக்கவேண்டும்.

ஆயினும் ஏழைகளின் கஷ்டங்களை உண்மையிலறிந்து உதவவேண்டும். 'பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு' என்பது பழமொழி. பாம்புக்கு பாலை வார்த் தால் நம்மையே கடிக்கும். மதியீனர்களும் துர்ச்சனர்களும் நற்புத்தி புகட்டினாலும் நன்றிசெய்தாலும் நமது உபகாரத்திற் குப் பதிலாக அபகாரமே செய்வர். தூக்கணாங் குருவியும் குரங்குமென்கிற கதைபோலாகும். தீக்குண முடையோருக் கும் குடியருக்கும் நன்மை பயன் பெறாது. சிலர் 'எப்படியா வது பிச்சைக்காரன் ஒழிந்தால் போதும்' என்று வெகுண்டு வசை மொழிகளுடன் ஏதோ ஏழைகளுச்கு கொடுத்து அனுப் பிவிடுகின்றனர். நாம் கொடுக்கும் பிச்சை தர்மகுண சம்பந்த மாயிருத்தல் வேண்டும். பிரதிதினம் ஒரு நல்லதேகக்கட்டுள்ள தடியனுக்கு ஒருஅணா கொடுத்துவந்தால் அவன் 'நமக்கு என் னமோ நாள் தவறாது சிரமமின்றி இலவசமாய் ஒருஅணா கிடைக்கின்றது. நாம் ஏன் வீணில் உழைக்கவேண்டும்' என்று அசட்டையுடன் சோம்பித்திரிந்து தன்வருமானத்தை மது பானக்கடையில் கரைத்துவிடுவான். அவனுக்கு சோம்பலும் மதுபானமுந்தான் நிலைத்துவிடும். வேலைசெய்து பிழைக்கத் திறமையுள்ளவர்களுக்கும் ஆஷாடபூதிகளுக்கும் உதவினால்

அவர்கள் குடியர்களாயும் சோம்பேறிகளாயும் வாணாளைப் போக்கி, மதிகுன்றி அறிவுகெட்டலைந்து மடிந்துபோவது மன்றி உலகத்திற்கோர் பாரமாயும் உலகத்திலுள்ள தீமைகளை யே அதிகரிப்பர்.

"ஒப்பொடுமுகமலர்ந்தே யுபசரித்துண்மைபேசி
உப்பில்லாக்கூழிட்டாலு முண்பதேயமிர்தமாகும்
முப்பழமொடுபாலன்னம் முகங்கடுத்திடுவாராகில்
கப்பியபசியினோடு கடும்பசியாகுந்தானே"

என்று விவேகசிந்தாமணியிற் கூறியுள்ளபடி நாம் ஏழைகளின் கஷ்டநிலைமையை அறிந்து மனப்பூர்வமாயும் முகமலர்ச்சியோடும் அளிக்கும் உப்பில்லாத கூழும் அவர்களுக்கு தேவாமிர்தமாயிருக்கும். அன்றி, நமக்குச் சம்மதமின்றி, முகஞ் சுளித்து, கடுகடுத்து, கஷ்டத்தோடு அளிப்பது பஞ்ச பக்ஷிய பரமான்னமாயிருப்பினும் அது அவர்களுடைய பசியை அதிகரிக்கச்செய்யும். ஆதலால் தர்மசிந்தனையோடும் தான தர்மங்களைச் செய்து நன்மையடையவேண்டும். 'அய்யனுக்கடி நாக்கு நஞ்சு, நுனிநாக்கமிர்தம்; வாய் வாழைப்பழம், கை கருணைக்கிழங்குதான்" என்று பிறர் கூறும் வசைமொழியைத் தவிர்க்கவேண்டும். உள்ளும்புறம்புங்கலந்த உண்மை விஸ்வாசம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களமையப் பெறவேண்டும். பிறர் நமக்கு நன்மை செய்யினும் தீமைசெய்யினும் அவர்களை நல்வழிப்படுத்துவதினிமித்தம் அவர்களுக்கு நன்மையே புரியவேண்டும். கானகத்தில் சுயேச்சையாய்த் திரிந்து பிளிறும் மதக்களிறும் பிடிமூலமாய் நம் வசப்படுகின்றது. மலைப் புழைகளில் பெருமூச்சுவிட்டுக்கொண்டு படம் விரித்தாடும் மாசுணமும் குழலோசையால் வசியப்பட்டு பிடாரன் வலையில் கட்டுப்படுகின்றது. இதர துஷ்டமிருகங்களாகிய சிங்கம் புலி, கரடி சிறுத்தை முதலியவைகளும் மனிதனுக்கு அடங்குகின்றன. அன்றியும் சாந்த மிருகங்களாகிய பசு, எருது, நாய், பூனை முதலியவைகளும் அடங்குகின்றன. நம் வீட்டுநாய் செய்நன்றி மறப்பதில்லை. ஆதலால் ஜீவகாருண்யத்தாலும் நற்போதனைகளாலும் தீயோரையும் நல்வழிப்படுத்தக்கூடும்.

இம்மண்ணுலகின் கண்ணுள்ள துன்பங்களை எண்ணி முடியாது. நமக்குத்தொட்டிலிலிருந்து மயானக்கட்டையிலேறும்

பரியந்தம் துன்பந்தான். கடவுள் நமது நன்மை கருதியே பரீக்ஷாரூபமாக பலவின்னல்களை அனுபவிக்கசெய்கிறார். ஆனால் எவ்வித துன்பங்களையும் இடையூறுகளையும் நாம் பொறுமையுடன் வரவேற்றுக்கொண்டு அனுபவித்துப் பெருமைபெறுவதே நமக்குச் சான்றதாகும்.

ஜீவகாருண்யத்தினால் தானதர்மம் செய்வதில் தாரதம்மியமுண்டு. முன்னர் பலா பலன்களை யறிந்தே பின்னர் தர்மஞ் செய்யவேண்டும். ஓர் போர் வீரன் பரிமீதிவர்ந்து அதிவேகமாய் அரண்மனைக் கோட்டை வாயிலை விட்டு வெளியே புறப்பட்டான். அத்தருணம் கோட்டைவாயிலி னருகில் பரிதாபமாய்க் கிடந்து இரக்கும் அந்தகனான ஓர் குஷ்டரோகியைக் கண்டு, தனது சட்டைப் பையிலிருந்து ஓர் சிறுவெள்ளி நாணயத்தை எடுத்து அவன் முன்னர் எறிந்து விட்டு தீவிரமாய்ச் சவாரிசெய்தான். அக்குஷ்டரோகி அவன் சும்மாபோவதைக் கண்டானே யன்றி, எறிந்த நாணயத்தைக் கண்டானில்லை. அச்சமயம் அவ்வழியே சென்ற ஒருமனிதன் அக்குஷ்டரோகியின் பரிதாபமான நிலைமையைக் கண்டு பச்சாதாபமடைந்து அவனை யண்டி கைபிடித் தழைத்துக் கொண்டு அருகிலிருந்த ஓர் தடாகத்துக்குச் சென்று, தான் கொணர்ந்த கட்டுசாதத்தில் பாதி பிட்டுக்கொடுத்துத் தானும் மீதியை உண்டான். பிறகு அவனுக்கும் தண்ணீரளித்து, அவனிருப்பிட மழைத்து வந்து விட்ட பிறகு தன்வழியே சென்றான். மேற்கூறிய போர்ச் சேவகனும் வழிப்போக்கனும் தர்ம சிந்தனையுடையவர்களேயாயினும் உண்மையில் உபகாரஞ் செய்தவன் வழிப்போக்கனே யன்றோ?

ஆகையால் பிறர்தம் சுக துக்கங்களைத் தமதாகபாவித்தும் பிறர்க்கு நன்மையுண்டாக்கத் தக்க உபாயங்களைத் தேடி நல்வழிகாட்டியும் ஜீவகாருண்யத்துடன் உதாரகுணம் பொருந்தி உய்வதே உலகத்திலுள்ள துன்பங்களை நிவர்த்திக்கத் தக்க சாதனமாகும்.

சி-எஸ். துரைசாமி, சைதாப்பேட்டை.

உணவு

சர்க்கரை முதலியவை தேகத்தில் எரிந்து சூடும் வேலைக்குச் சக்தியுமுண்டாக்குகிறது. தைலங்கள் தேகத்தில் கொழுப்பாய் சேர்ந்து வேண்டியபோது உதவும் ஸ்திதியிலிருக்கிறது. சிகண வஸ்து மாமிசபோஷணையும் க்ஷீணத்தையும் சரிப்படுத்துவதுமல்லாமல் தேகத்தில் தைலமாகமாறி கொழுப்பாக சேர்ந்திருப்பது முண்டு. 2500 முதல் 4500 காலொரிசத்து வேண்டுமென்று சரா சரி கணக்கு எடுத்திருக்கிறார்கள். குடித்தன வேலைசெய்யும் அமெரிக்கருக்குச் சராசரி 3551 காலொரி சத்து வேண்டியதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. சாப்பாடு தகுந்தபடி இல்லையானல் தேகத்திலுள்ள கொழுப்பும் மாமிசமுமே கிரமமாக உபயோகப்படுவதால் 40 நாள் வரையிலும் பட்டினி இருக்கலாம். தேகத்தில் சேர்ந்திருந்தமாமிசம் கொழுப்பு முழுவதும் செலவான பிறகு தேகத்திய எல்லா வேலையும் நின்று பிராணன் போகும்.

ஷை அளவுக்கு உணவு மேல்பட்டால் இறைப்பைக்குச் சத்திகுறைந்துபோகிறது.உணவு தக்கபடி தகிக்கப்படுவதில்லை, அதன் சக்தி தேகத்துக்குப் பயன்படுவதில்லை. ஒரு அடுப்பில் கட்டையை அதிகமாய் வைத்தால் எரியாமல் புகைந்து போவதும் சமையல் தாமதப்படுவதும் தெரிந்தவிஷயமே. அளவுக்கு மிஞ்சிய சாப்பாடும் அப்படியே, தைல உணவு சில,வேளைகளில் கொழுப்பாக சேர்ந்து உடம்பில் இருக்கும். ஷை 2500 முதல் 4500 காலொரிசத்து 30 பாகம் தைலமாகவும் 60 பாகம் மாவு சர்க்கரை முதலியவானவும் 10 பாகம் சிகணமாகவும் இருக்க வேண்டும். இதனுடன் அதிகசலம் வேண்டும்.

வளரும் பிள்ளைகளும் கஷ்டப்பட்டு வேலை செய்யும் மனிதர்களும் மாமிசம் சாப்பிடுவது அவசியம். மற்றவர்கள் இடைவிடாது 3 வேளையும் மாமிசம் சாப்பிட்டால் அளவுக்குமிஞ்சினல் அமிர்தமும் நஞ்சு என்பதுபோல ரத்தத்தில் விஷசம்பந்தமான வஸ்துக்கள் உண்டாகி பலவிதவியாதிகளை உற்பத்திசெய்கிறது. மூத்திரத்தைப்பிரிக்கும் என்று சொல்லப்பட்ட மாங்காய்க்கு அதிகவேலை உண்டாகி அதனல் அது இளைத்து க்ஷீணித்து கொழுப்பேறி தக்கபடி வேலைசெய்ய சக்தியற்றுப்

போகிறது. அதிகமாக மாமிசம் சாப்பிடுகிறவர்கள் அதைக் குறைப்பது சிரேஷ்டம், மாமிசத்துக்குப்பதில் பால் வெண்ணெய் முட்டை மீன் காய்கறிகள் பழங்கள் மாவுசர்க்கரை முதலியவைகளைச் சேர்ப்பது யுக்தம்.

மனிதர் உணவு குளிர்காலத்துக்கும் வெயில்காலத்திற்கும் ஒன்றுபோலில்லாமல் வேறுபடுவதுபோல குளிர் ராச்சியத்திலும் உஷ்ணராச்சியத்திலும் வேறுபடுகிறது. குளிர்காலத்தில் சூடுண்டாகக்கூடிய கொழுப்புதைலம்முதலியவைகளும், உஷ்ண காலத்தில் பழங்களும் காய்வகைகளும் பருப்பு தினுசுகளும் அவசியம். காய்களும் பழங்களும் வயதுகாலத்திலும் முதிப்பிலும் எப்போதும் அவசியமானவை. கடுங்குளிர் நாடுகளில் கொழுப்பு வெண்ணெய் தைலம் அதிகம் சாப்பிடவேண்டும். கிரீன்லாண்டு தேசத்தில் கொழுப்புத் திமிங்கிலத்தையும் பன்றி மாமிசத்தையும் சாப்பிடும் வழக்கம் வந்திருக்கிறது. அந்நாட்டுகளில் ஏழைகள் கொழுப்பால் செய்யப்பட்ட மெழுக்குவத்திகளைச் சாப்பிடுவதுண்டு.

உஷ்ண தேசத்திலுள்ளவர்களுக்கு உணவு ஒன்றுபோல மிதமாகவும் தைலப்பசை அதிகமில்லாமலும் காய்கறி பழம் பருப்பு வகைகளுடன் இருக்கும் உணவுசிறந்தது. சிகண உணவாகிய மாமிசம் முட்டை இவைகளை மிதமின்றிசாப்பிடுவதில் தேகம் கெட்டுபோகுமே யல்லாமல் சுகம்கிடையாது. அதிக கஷ்டப்படுகிறவர்கள் அதிக மாமிசம் சாப்பிடவேண்டு மென்கிற கொள்கை கிடையாது. மாமிசத்தின்சத்து தானியவகைகளினும் சர்க்கரை முதலியவைகளிலும் தேகபோஷாப்புக்கு வேண்டிய காலொரி சத்து இருப்பது நன்றாய் மனதில் பதிய வைக்க வேண்டும். சிகண உணவுகள் அதிகமாய் நடமாடினால் அவைகள் வயிற்றிலும் குடலிலும் அழுகிபலவித விஷவஸ்துக்களை உண்டாக்கி பித்தமதிகரித்தல், விடாதலைநோவு, நரம்பு தளர்ச்சி, கைகால்பூட்டு நோய் முதலிய கெடுதிகள் சம்பவிக்கின்றன. இவ்வுணவினால் கல்லீரலும் மூத்திர மாங்காயும் இளைத்து கொழுப்பால் நிறைந்து வேலை செய்யாமல் போகின்றன. யவ்வனவயதில் முக்கியமாய் மரணம் சம்பவிப்பது அநேகமாய் முட்டைமாமிசம் விபரீத உபயோகத்தினாலே யென்றே தெரிய வருகிறது. இவைகளுக்குப்பதில் மீன் பருப்புவகைகள் பால்

முதலியவை ஏராளமாய் உபயோகப்படலாம். பிள்ளைகளுக்கும் சிலயவ்வனஸ்தருக்கும் பால் மிகவும் விசேஷப்பட்ட உணவு. விலை அதிகம் கொடுத்தாலும் நஷ்டமில்லை. ரொட்டி வெண்ணெய் பால் இம்மூன்றுமே மனிதனுக்குப் போதுமான உணவு.

யவ்வன மூப்பு உடையவர்கள் காய்கறிகளையும் பழங்களையும் அதிகமாய் உபயோகிக்க வேண்டும். இவைகளில் தேகத்துக்கு வேண்டிய காலொரிவஸ்து குறைந்திருந்த போதிலும் ஜீர்ணமாகாத நார் முதலியவஸ்து அதிகமிருப்பதால் மலம் சிக்குபடாமல் சுலபமாய் வெளிப்படுகின்றது.

இதுவரையிலும் தேக ஆரோக்கியம் உணவினால் எவ்வாறு வித்தியாசப்படுவதை விசாரித்தோம். அகவிலையினால் உணவு பதார்த்தங்கள் விலை ஏறிக்கொண்டே போவதால் தேகத்துக்கு வேண்டிய ஆகார காலொரி மொத்தத்தை எம்மாதிரி சுலப விலையில் வாங்கலாம் என்பதைப்பற்றி கவனிப்போம்.

அனேகமாய் மத்தியஸ்திதி க்ஷேமத்திலுள்ளவர்கள் விலையதிகப்பட்ட உணவுகளை வாங்குவது மொத்தத்தில் சிக்கனமாகுமென்று நினைப்பது சகுந்த செட்டல்ல. உருசியை அனுசரித்து பதார்த்தங்களுக்கு அதிகவிலை கொடுத்து வாங்குகிறாரேயொழிய ஒவ்வொருபதார்த்தத்தின் சத்து இவ்வளவென்று தெரிந்து வாங்குவாரில்லை. பின்னும் ஏழைகள் சாப்பிடும் கேழ்வரகு சோளம், காரரிசி, மரவள்ளிக்கிழங்கு, பட்டாணி, வேர்கடலை, முதலியவைகளை வாங்க சிலர் வெட்கப்படுவதுண்டு. பழையரொட்டி பொடிக்கறி இவைகளை அனேகர் வாங்குவதில்லை. சமையல் செய்யும் பாகத்தைச் சிறிதுகவனிக்கும் விஷயத்தில் ஷை விலை குறைந்த வஸ்துக்களிலும் நமக்கு வேண்டிய உருசியையும் சத்துவையும் அடையலாம். பதம் பண்ணப்பட்ட துப்பாக்கிமாவுக்குவிலை அதிகம் கொடுப்பார்கள். அதை உண்டாக்கும் வள்ளிக்கிழங்கை விலைக்கு வாங்கமாட்டார்கள். வேர்க்கடலை பிண்ணாக்கை யார்தான் மனித உணவென்று நினைப்பார்கள். அதையே மருந்துகளால் மாற்றி நாட்டுரோஸ் என்னும் உணவாக்கி ராத்தல் ஆறு ரூபாய்க்கு விற்றாலும் வாங்க பணக்காரர் காத்திருக்கிறார்கள்.

ஆகவே விலை மாத்திரமே உணவின் காலொரி சத்தை தெரிவிக்காமல் அனேக வஸ்துக்கள் மலிவாய்க் கிடைத்தாலும் தேகத்துக்குப் போதுமான சக்தியை உண்டு பண்ணக்கூடிய கிழங்கு வகைகள், பருப்புவகைகள், மாவு, வெல்லம், மீன் முதலியவை சிரேஷ்டமானவைகள்.

பால் விஷயமாய் அனேகருக்குத்தக்கவாறு தெரியவில்லை யென்று துணிவாய்ச்சொல்லலாம் ½ படிபால் 6 முட்டைக்குச் சமானம். விலை ஒன்றுபோல் ஒருவாறு இருந்தாலும் குழந்தைகளுக்குப்பாலே விசேஷமானது. அவரைமுதலியகாய் தானியங்கள் வறுக்கப்பட்டாவது குழம்பில் வேகவைத்தாவது சாப்பிடுவதில் சிகணவஸ்து உணவு அதிகம் கிடைக்கிறது. கோதுமை மாவு மக்காசோளமாவு உருளைக்கிழங்கு இவை களைச்சேர்த்து செய்தரொட்டி சிரேஷ்டமானதாகவே இருக்கிறது.

உணவின் மர்மங்கள் தெரியாமலே அதிகபணம் செலவு செய்து உணவுகளைக் குப்பை தொட்டியிலே சேர்ப்பது பரிதாபமான விஷயம்.

உணவில் வேண்டிய ஒவ்வொரு அம்சமும்பொருந்தியிருந்தால் தான் தேக ஆரோக்கியத்துக்கும் சத்துக்கும் உபயோகப் பட்டு நஷ்டமாகாமலிருக்கும்.

அமெரிக்கரும் ஐரோப்பியரும் இவ்வாறு கணக்கு பிரகாரம் உணவை பசுமாடுகளுக்கு ஏற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய மாமிசமோ வெண்ணெயோ பாலோ வேண்டியபடி அனுபவிக்கிறார்கள். இவ்வாறு தீனிதின்னும் மாடுகள்பலமுள்ளகன்றுகளையும் ஈனுகின்றன. பசுமாடுகள் இவ்வாறு போஷிக்கப்பட இஷ்டமான பண்டம் அடைவதினால் மனிதர்களுக்கும் அவ்வாறே முறையை அனுசரித்தால் குழந்தைகளும் பிள்ளைகளும் புத்தியுள்ளவர்களாயும் தேக காத்திரமும் சக்தியுமுள்ளவர்களும் ஆவார்கள் என்பதில் என்ன ஆக்ஷேபனை? ஒரு தேசத்திய மனிதர்களே அத்தேசத்து க்ஷேமகுறிப்பாதலால் இவ்விஷயம் தாய் தகப்பன்மாரோடு கவர்ன்மெண்டார் கலந்து செய்ய வேண்டிய வேலை.

தெ. வி. கை.

தென்னை.

இது வெகு சாதாரண மரம். இது நன்செயிலும், புன்செய்யிலும் நன்முய் வளருகிறது. நன்செய் நிலம் வெகு ஆழம் வரையில் வண்டல்சேர்ந்த நல்ல மண்ணுய் இருக்கும் பட்சத்தில், மரங்கள் சில சமயங்களில் அதிகக் கொழுப்பெடுத்துச் சரியாகக் காய்க்கிறதில்லை. அப்படியிருந்தால் மரங்களைச்சுற்றி ஆழமாய்க் குழிகள் பறித்து, அவைகளில் சரளை அல்லது கப்பி கொஞ்சம் போட்டு நிரப்பி, மேலே மண்ணைப்போட்டு மூடிவிட வேண்டும். இது வேருக்குக் கபாத் செய்வது மாதிரியாகும். எங்கெந்த மரங்கள் காய்ப்பு இல்லாமல் கட்டையும் இலையுமாய் நிற்கின்றனவோ அவைகளுக்கு இந்த முறை நிரம்பச் சிலாக்கியமான பரிகாரமாயிருக்கும்.

1. இதை ஒரு தைலவிதைப் பயிராகவும், நார் வகைப் பயிராகவும், பழவகைப் பயிராகவும், கொள்ளலாம். ஆனல் நமது இராஜதானியில் முக்கியமாகத் தேங்காயெண்ணெய் பிரயோஜனப்பட்டு ஜாஸ்தியாக ஏற்றுமதியுமாவதால் இதை முக்கியமாகத் தைலவிதைப் பயிராகவே கொள்ளவேண்டும். உப்புத்தீனி அதாவது நாம் உபயோகிக்கும் உப்பில் இதற்குப் பிரியம் ஜாஸ்தி; ஆகையால்தான் சமுத்திரக்கரை யோரங்களிலும், உப்பங்காற்று உள்ள இடங்களிலும் தென்னை நன்முக வளருகிறது.

2. மாதிரிகள். பச்சைக்காய்ச்சி

(1) காம்பு, காய் இவைகள் ஒரே பசுமையாக இருக்கும். காய் அநேகமாய் உருண்டையாயும் குலை கனமாயுமிருக்கும்.

(2) கவுளிபாத்திரம்.

காய் மஞ்சளாகவும், சில வேளை ஊதா நிறமாகவுமிருக்கும் காய் நடுத்தரமாயும், ஆனல் தேங்காய்ப் பருப்பும் கொட்டாங்கச்சியும் கனமாக இருக்கும்.

(3) செவ்விளநீர்.

காய், புஷ்பம், காம்பு இவைகள் சிகப்பாயிருப்பதுடன், காய் சிறிதாயும் உருண்டையாயுமிருக்கும்; இதன் இளநீர் ஔஷதமாகக் கொள்ளப்படுகிறது.

(4) முட்டைவடிவம்.

காய் நீளமாயும் காம்பு நல்ல காத்திரமாயுமிருக்கும். கொட்டாங்கச்சி சிறிதாக இருக்கும்.

(5) உருண்டை வடிவம்.

காய் பந்தைப்போல உருண்டையாக இருக்கும். குலையில் அதிகக் காய்களிருக்கும்.

(6) யாழ்ப்பாணத்துக்காய்.

காய் நிரம்பப் பெரிதாக இருக்கும்.

(7) கோவா தேசத்துக்கா.

குலைக்கு 2-காயிருக்கும்.

3. உப்பங்காற்றுக்குச் சமீபமுள்ள மணற்சாரியும், படுகையும், சிலாக்கியம். சமுத்திரக்கரை யோரமாக உள்ள மணல் சாரியிலும் கப்பிக்கல் அல்லது மணல்படைக்கு மேலுள்ள களியிலும் தென்னை சாகுபடி செய்யலாம்.

4. பூமியை நன்றாய் உழுது 15-அடிக்கு ஒருதடவை ஒரு கெஜ சதுரமுள்ள குழியை 3-அடி ஆழம் தோண்டி உலரப் போட்டு விடவேண்டியது; நன்றாய் உலர்ந்த பிற்பாடு ஒருபடி உப்புடன், சப்பாத்திக்கள்ளி, அதன் வேர்மண், சாணம் முதலிய எருக்களால் பாதிக்குழியை நிரப்பிவைக்கவேண்டும். குழிகளை ஒரு மாதத்துக்குக் குறையாமல் உலரப்போட்டு வைக்க வேண்டும். இளம் பிள்ளையைக் கறையான் அரிக்காமல் இருப்பதற்காக ஒரு சிறு கூடை மரச்சாம்பால் ஒவ்வொரு குழிக்கும் போடுவது நல்லது

5. 200-சதுரடி உள்ள மணற்பாங்கு மேட்டுப் பூமியில் நன்றாய் 3-அடி ஆழம் கொத்தி அடிக்கு ஒரு நெற்று வீதம் முகம் கொஞ்சம் வெளியே தெரியும்படி ஜலம் விட்டுக் கொண்டே வரவேண்டும்; சாம்பலும், உப்பும் நெற்றுக்கு அடியில் போட்டால் கறையான் வராது. 2-3-தரத்துக்குக் குறையாமல் தண்ணீர் விட்டுக்கொண்டு வரவேண்டும். சுமார் 3-மாதத்தில் குருத்துக் கிளம்பலாம். நெற்றைக் குளத்துஜலத்தில் போட்டு வைத்திருந்தாலும் 6-மாதத்தில் முளை கிளம்பும். நெற்றுக்கு உதிர்ந்த நெற்று பிரயோஜனமில்லை; நல்ல வயதான மரத்திலுள்ள நல்ல நெற்றை ஜாக்கிரதையாக எடுத்து, சுமார் 6-மாதம் காப்பாற்றி வைத்திருந்து இளநீர் சுண்டிப்போவதற்கு முந்திப் புதைத்து விடவேண்டும். குருத்துக்கிளம்பி 6-மாதத்துக்கெல்லாம் தயார் செய்திருக்கப்பட்ட குழியில் பிடுங்கி நட்டு விடவேண்டும். 15-அடிக்கு ஒரு குழி இருக்கும் பட்சத்தில் ஏக்

கர் 1-க்கு நட 200-பிள்ளைசெல்லும். பிள்ளைகளை 20-அடிக்கு ஒன்று வைப்பதுதான் திறம்; நெருக்க வைத்தால் மரம் கோணிப்போய் காய்ப்பு அதிகமாகக் காய்க்காது; சாதாரணமாய் 2-வருஷத்துப் பிள்ளைகளைக் குழியில் நடுகிறார்களாம். இப்படி நட்டவுடன் பிள்ளையை வெய்யிலில் படாமல் மூடி வைக்கவேண்டும் சில இடங்களில் 3-வருஷமான பிள்ளைகளையும் சில இடங்களில் 5-வருஷமான பிள்ளைகளையும் மறுபடி நடுகிறார்களாம். இப்படிச் செய்வதால் காய்ப்பு ஜாஸ்தியாகிறதாம்.

6. தென்னம்பிள்ளை வைப்பதற்கு மழைகாலந்தான் திறம்; அதாவது செப்டெம்பர், அக்டோபர் மாதங்கள்.

7. இளம் பிள்ளைகளை நட்ட பிற்பாடு 5-வருஷம் வரையில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டேவரவேண்டும். நட்டவுடன் 2-தினத்துக்கு ஒரு தண்ணீரும், வேர் நன்றாய்ப் பிடித்து ஊன்றிப்போனவுடன் வாரத்துக்கு ஒரு தண்ணீருக்குக் குறையாமலும் பாய்ச்சி வரவேண்டும். 5-வருஷத்துக்குப் பிற்பாடு பாசனம் வேண்டியது வேண்டாதது பூமியின் சுபாவத்தைப் பொறுத்ததாயிருக்கிறது.

8. நட்டுப் பயிர் ஊன்றிய பிற்பாடு முதல் 2, 3-வருஷத்தில் கடலை, இஞ்சி, வெங்காயம், கம்பு, கேழ்வரகு, வாழை, கரும்பு முதலிய பயிர்கள் சாகுபடி செய்யலாம். இப்படிச் செய்தால் பூமி அடிக்கடி கிளறப்பட்டு நல்ல வளத்திலிருக்கும்.

9. பயிர் வளருகையில் அடிக்கடி பூமியைக் கொத்திப் பயிருக்கு உரம் அணைத்துவரவேண்டும்; 5-வருஷத்துக்கும் பிற்பாடு மழைகாலத்தில் தென்னையைச் சுற்றி 4-அடி வெட்டிக் கொத்தி வேர்களைக்களைந்து சாம்பல், சாணம், தோல்கிடங்கு எரு, சப்பாத்திக்கள்ளி, உப்பு, முதலிய எருவை மண்ணுடன் கலந்து மரத்தின் அடியில் அணைத்து, மரத்தைச்சுற்றி மழை ஜலம் வெளியில் போகாதபடி விடவேண்டியது.

10. தென்னை சாதாரணமாய் 70-வருஷத்துக்கு மேற்பட்டால் தலை மாறிவிடுமென்றுசொல்லுகின்றனர். 30-வயதான மரத்தை நல்ல முதிர்ந்த மரமென்று சொல்லலாம். தென்னைக்கு வயது சுமார் 100-வருஷம்;

11. சாதாரணமாய் 6-வருஷத்தில் காய்க்க ஆரம்பிக்கும் செய்நேர்த்தியில் கவனக்குறைவிருந்தால் சில சமயம் 7-வது

வருஷத்திலும் காய்க்க ஆரம்பிக்கும்; வருஷத்துக்கு ஒரு மரத்துக்கு 10-குலை கிடைக்கும்; குலைக்குச் சராசரி 10-காய்க்குக் குறையாது; சராசரி வருஷம் 1-க்கு மரம் 1-க்கு ரூ 1-கிடைக்கும். தென்னை சாகுபடியில் போட்ட முதலுக்கு எலலாம் ஒத்துக்கொண்டால் வருஷம் 1-க்கு ரூ 100-க்கு ரூ 24-வட்டி கிடைக்கும்; தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுக்கலாம் 50-காய் மட்டையிலிருந்து சுமார் 6-இராத்தல் நார் கிடைக்கும்; ஒரு மரத்திலிருந்து வரும் தேங்காய் மட்டை நார் சுமார் அணு 2½ விலை போகுமாம்; பாளைவைத்து 9-மாதத்துக்கெல்லாம் பிடுங்குகிற காயின் நார்தான் சர்வசிலாக்கியம். அதிக இளங்காய் நாரும் முதிர்ந்த காய் நாரும் அவ்வளவு திறமல்ல. 100-இராத்தல் தேங்காய்ப் பருப்புக்கு சுமார் சராசரி 40-இராத்தல் எண்ணெய் கிடைக்கலாம்.

12. தென்னம் பாளையிலிருந்து கள் இறக்கலாம். இந்தக் கள்ளிலிருந்து சாராயம் இறக்குகிறார்கள். சுண்ணும்பு தடவின கலயத்தில் பதனி இறக்கலாம். இந்தப் பதனியிலிருந்து வெல்லம் காய்ச்சலாம். தேங்காயெண்ணெயிலிருந்து சோப்பும் மெழுகுவர்த்தியும் செய்யலாம். தேங்காயெண்ணெய்ச்சோப்பு உப்பு ஜலத்துக்கு பிரயோசனமே ஒழிய நல்ல ஜலத்துக்கு உபயோகமில்லை. தென்னமரம் கட்டிடத்துக்குத் தூண், உத்திரம், கைமரம் இவைகளுக்கு உபயோகப்படும்; தேங்காய் நாரிலிருந்து வடங்களும், மேஜைப்பாய்களும், கூடைகளும், அனேக தினுசுக் கயிறுகளும், விரிப்புகளும் துடங்கப்பங்களும், பண்ணலாம்; தேங்காய் பிண்ணுக்கு கறவை மாடுகளுக்குக் கொடுக்கலாம். தென்னேலை மட்டையிலிருந்து ஒருவித நார் எடுக்கலாம்; தேங்காயெண்ணெய் புசிக்கவும், குளிக்கவும் உபயோகப்படுகிறது.

13. வண்டினுல் ஏதாவது மரத்துக்குக் கெடுதல் ஏற்பட்டால் அந்த வண்டைக்குத்தி எடுத்து விடவேண்டும்.

கு. வி. ப.

அனல் அடுப்பு

இப்பெயர் வாசித்ததும் கேட்டதும் அனேகர் பரிகசிப்பார்கள். "அச்சில்லாமல் தேர் ஓடும், அகமுடையானில்லாமல் பிள்ளை பெற்ருள்" என்பதுபோல என்பார்கள். சாஸ்திர ஞானத்தோடு அனுபவத்தைக் கவனிக்கும்போது இதன் சங்கதி உண்மையென்றும் உபயோகப் படுமென்றும் புலப்படும், நம்தேசத்தவர் இவ்வாறு பரிகசித்து தான் தொட்டில் முதல் சுடுகாடுவரையில் இன்றியமையாத பண்டங்களையும் சாதனங்களையும் அந்நிய நாட்டிலிருந்து விலைக்கு வாங்கி பழகிவருகிருர்கள். குழந்தைபால் குடிக்கும் சீசா, சீமைப்பால், நாம் குடிக்கும்ஸோடா, தித்திப்பு பெபர்மிட், தின்னும் பிஸ்கத்,உடுக்கும் ஆடை, பிடிக்கும் குடை, நோய் குணப்படுத்தும் மருந்து, வாசிக்கும் புஸ்தகம், விளையாடும் பந்து, சவாரி செய்யும் வண்டி, எரியும் விளக்கு, பயிரைப் போஷிக்கும் எரு இன்னும் கோடானகோடி சரக்குகள் அயல் நாட்டிலிருந்து நமக்கு லக்ஷக்கணக்கான ரூபாய்க்கு வியாபாரம் நடநதேறுகிறது. இவ்வளவுக்கும் கொடுக்கும் பணம் விவசாயத்திலிருந்தே ஒழிய வேறு ஆதாரத்தில் கிடைப்பதல்ல. நமக்குக் கைத்தொழில் கிடையாது. மண்ணுக்குள்ஒளித்திருக்கும் உலோகங்களைத் தேடத் தெரியாது. சமுத்திரத்துக்குள் மறைந்திருக்கும் வஸ்துக்களைக்காண வகைதெரியாது.விவசாயப் பதார்த்தங்களைத் தக்கபடி பதம் செய்யத் தெரியாது. அவைகளைத் தின்னவும் தெரியாது.நீடித்து வாழவும்தெரியாது. பணம் சம்பாதிக்கவும் தெரியாது. பணத்தைப் பரிபாலனம் பண்ணவும் தெரியாது. இல்லை இல்லையென்பதும், தெரியாது தெரியாது என்பதுமே நம்மிடத்தில் பலமாக குடிகொண்டிருக்கிறது. சண்டாளஎ ஜர்மனி யுத்தம் கிளம்பி அயல்நாட்டு வியாபாரம் தடுமாறிப் போயிற்று. அகவிலை பஞ்சத்தை உண்டாக்கிற்று. இவ்வருஷம் மதித்த விளைவு தென்னிந்தியாவில் பதராய்ப்போயிற்று. நாம் திண்டாடுகிருேம். கட்டத்துணி இல்லை. சாப்பிட உணவு இல்லை. வேதாந்தம் தான் நமக்கு சமாதானம். அதிலும் நம்பிக்கைக் குறைவு படுகின்றது. அதுவும் இல்லையானல் களவு கொள்ளை கொலை முதலியன சொல்ல முடியாது. ஜகத்துக்கு கர்த்தா ஆதாரமாக இருப்பதுபோல நமது குறைவுகளுக்கும்க்ஷேமத்திற்கும் முக்கிய ஆதரவு படிப்பு. நம்மில் இது இல்லை. சென்ற இருபது வருஷகாலமாய் விவசாய விஷயமாய்

தமிழருக்கு நம்மால் இயன்றமட்டும் புஸ்தகங்கள் ரூபமாகவும் மாதாந்த தென்னிந்திய விவசாய பத்திரிகை மூலமாகவும் விவசாய விருத்தி ஞானத்தைப் புகட்டிவந்திருக்கிறோம். ஜனங்களுக்குப் பிடிக்க வில்லை. நாம் அனுபவிக்கும் கஷ்டங்களைக் கவனித்தும் வருஷத்துக்கு முக்கால் ரூபாய் சந்தா வைத்து நடத்தும் கிருஷிகனும் தக்கபடி ஆதரிக்கப்பட வில்லை யென்று நாவல்கள் எழுதி "ராஜாம்பாள்" என்னும் நாவலை எத்தனையோ தரம்பதிப்பித்திருக்கிறார்கள். சிகரெட், காபி கிளப்பு முதலிய சில்லரை விஷயங்களிலேயே நமது முழுகவலையையும் வாழ்நாளையும்இனி மேலும் செலுத்துவோமானால் தேசம் பிழைக்க வகை இல்லை. நமது எண்ணம் எப்படி இருக்கிற தென்றால், பத்துபேர்அறிய மணம் புரிந்த உத்தமி கஞ்சுக்குக் கதியற்று, கந்தையற்று நடுத், தெருவில் அலைய, விலைமாதர் வைரத்தோடுகள் அணியவும்மோட்டார் சவாரி செய்யவும், அவர்கள் பாதாரவிந்தமே கதிமோக்ஷமென்று விழுந்து கிடக்கும் பாதக புருஷரைப்போல் தேசமிருக்கிறது.

டம்பாச்சாரி விலாசத்தில் மதனசுந்தரி எல்லாப் பொருளையும் கிரகித்து தெருவில் விட்டது போலவே நமது கதி ஜர்மனி யுத்தத்தால் ஆய்விட்டது. உத்தமியாயிருந்த தாலிகட்டிய சமுசாரமே எப்போதும் உதவுமாப்போல நமக்கு இதுவரையிலும் திண்டாடிய விவசாயமே நம்மைக் காப்பாற்ற வேண்டு மென்றும் ஊக்கத்தோடு இது விஷயமான ஞானத்தைத்தேடி அடைந்து விருத்தியடையும் மார்க்கங்களை அவலம்பிக்க வேண்டுமென்றும் நம்மை எப்போதும் ஆபத்தில் காப்பாற்றிவந்த பலதேசங்களிலும் பலபல நாமமடைந்து உலாவிவரும் ஸ்ரீமந்நாராயணன் இச்சமயமும் நம்மை காப்பாற்றுவார். இதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

இப்பீடிகையுடன் முகப்பில் பெயர்பூண்ட அனல் அடுப்பைப்பற்றிக் கூறுவதில் எவ்வளவு சாஸ்திர ஞானம் நமக்குஅவசிய மென்பது புலப்படும்.

சுமார் 10-15-வருஷத்துக்கு முன் இச்சாதனம் வெளிப்பட்டு தற்சமயத்தில் ஒவ்வொரு வீட்டிலும் பலகாரம் செய்யும் கடைகளிலும் அமெரிக்காவில் உபயோகப்படுகின்றது. இதன் தாத்பரியம் என்னவெனில் சமைக்கும் சாப்பாட்டைச்சுற்றிலும்

ஒரே நிதானமான சூடு இருக்கவேண்டு மென்பதே. இச்சாத னம் கடைகளில் விற்பதுண்டு. சிலர் சொந்தத்துக்கு வீடுகளி லும் செய்துக் கொள்ளுவார்கள். பிரபஞ்சத்தில் உள்ள வஸ்து க்கள் சில சூட்டை சடுதியில் கிரகிக்கும் குணமுடையதாய் இரு க்கின்றன. வேறு சில சூட்டை கிரகிக்காமல் இருப்பதும் உண் டு. இக்குணங்களைக் கையாண்டு சூட்டை நஷ்டப்படுத்தாமல் நிலைத்துக் கொள்ளுவதுண்டு. தூரதேசத்துப் பிரயாணம்போகி றவர்கள் காலையில் சமைக்கும் உணவு மாலைவரையிலும் சூடுகொ ண்டிருக்க வேண்டுமென்று வெண்கல பாத்திரத்தில் சமைத்து வண்டியில் வைக்கோலில் புதைத்து வைக்க சாயந்திரவளையில் உணவு சுட்டுக்கொண்டே இருப்பது அனுபவித்தவர்களுக்கு சாக்ஷியம். பின்னும் பட்டாளங்களில் முக்கால் சமைத்த உண வுகளை சுடு சாம்பலால் மூடி அதை மண்ணால் மூடிவைக்க உண வுபூராவும் வெந்து சண்டையில் பூர்வத்தில் உதவி வந்தது. சில காடுகளில் கரி சுடுகிறவர்கள் பருப்பு வகைகள் வேகிறதற்கு அதி கநேரம் செல்லுகிறதென்று பருப்பும் சலமும் கொதிப்புவரவே பாத்திரத்தை நன்றாய் மூடி சுடுசாம்பலால் மூடி அதன்மேல் மண்ணால் மூட மறுநாள் காலையில் பருப்பு நன்றாக வெந்து சுட் டுக் கொண்டேயிருக்கும். மரக்கரியும் உண்டாகும். இவ்வாறான பழக்கங்களை குடும்ப உபயோகத்தில் கொண்டுவர வேண்டுமெ ன்று ஐரோப்பா கண்டத்தில் நார்வே தேசத்தில் முதல் முதல் வைக்கோலால் மூடி சூட்டைக் காப்பாற்றினார்கள். இதுபோல வேரோம் நாட்டு கவீசுரர்கள் ஒரு யூத பிச்சைக்காரி தனக்குக் கிடைத்த சாப்பாட்டை ஒருகூடை வைக்கோலில் புதைக்க சூடு தணியாமல் இருந்ததாக தெரிவிக்கிறார்கள். (Ice) ஐஸ்கட்டி வாங்கிப் போகிறவர்கள் வாள்தூளில் புதைத்துப் போவதும் வெளிச்சூடு பட்டு ஐஸ் உருகிப்போகாத மார்க்கமே. இவ்வாறு செய்த ஜனங்கள் இங்கிலாந்தில் 1857 - லும் அமெரிக்காவில் 1866-லும் பேடெண்டு ரிஜிஸ்தர் செய்திருக்கிறார்கள். சென்ற 10 வருஷமாய் இதன் உபயோகமும் லாபமும் வெளிப்பட்டு சாஸ் திர உதவியால் பல நூதன சாதனங்கள் வெளிப்பட் டிருக்கின் றன.

தெ. வி. கை.

இந்தியர் வீர நிலைமையும் ராஜவிசுவாசமும்

நமது மகோன்னத இந்தியாத் தேசமானது அநாதிகாலந் தொட்டுப் பல அளவற்ற மன்னர்களால் ஆளப்பெற்றது. இத் தேசத்தில் வசிக்கும் இந்தியர் யாவரும் எவ்வகையிலும் வீரமே தங்களுக்குப் பூஷணமாகக் கொண்டு வாழ்நாள்களைக் கழித்து வந்திருக்கின்றார்கள். வீரமென்று வழங்கும் வாக்கியமானது பல பொருளைத் தருவதானாலும் அவற்றுள் வன்மைபலன் வைராக்கியம் தைரியம் என்பனவற்றையு முணர்த்துவதாகும். அதை மனம் வாக்கு காயம் ஆகிய இம்மூன்றிடத்தும் மனிதர் அவசியம் கொள்ளவேண்டிய தொன்றும். அவ்விதமே ஒன்றை நிறைவேற்றவேண்டின் அவ்வீரத்தன்மையை மனத்தின்கண் செலுத்துவாராயின், அது மனத்தாலாகிய சேட்டைகள் யாவை யுமடக்கி அவ்வொன்றையு முட்டின்றி முடிக்க ஹேதுவாகும். வாக்கின்பால் வைப்பாராயின் எவ்வித சுகதுக்கங்களையும் கருதாது சொற்சோர்வுபடாத பெருமித குணத்திலேயே நின்று உலகமதிக்கும் கீர்த்தியைக் கொடுக்கின்றது. காயம் சரீரத்தி னிடத்தில் சேர்ப்பாராயின் அது முயற்சியையும் திடத்தையும் கொடுத்துப் போஷித்துதவுகின்றது. இதனால் மனோவாக்குக் காயங்களினாலாகிய பலன்களை இவ்வீரத்தின் சகாயமில்லாமல் எவ்வாற்றானும் எய்துவதரிதேயாகுமென்றறிய வேண்டும்.

அங்ஙனமே இத்தேசத்தை யாண்டுவந்த பண்டைக்கால மன்னர்களெல்லாம் மேலே குறிப்பிட்ட மனோவாக்கு காய மிவற்றினாலாகும் பயன்களை லேசாக வெய்துதற்கு வீரமே ஆதாரமெனக்கொண்டு அத்துடன் நியாயம் தியாகம் என்ற இருகுணங்களையும்சேர்த்து ஆகமுக்குணங்களும் சுத்தவீர ரென்ற தங்களுள்ளவாசலில் நித்தியம் ஷை வீரம் நியாயம் தியாகம் என்ற மூன்றையும் குறிக்கும் சின்னங்களாக பேரிகை முரசவாத்தியங்கள் முழக்குவிப்பது வழக்கமாகும். (திருவள் ளுவர் மாலையில் இதனை மும்முரசு என்றார் சீத்தலைச்சாத்தனார்) இம்முக் குணங்களின் விசேஷத்தாலேயே இவர்களது பெருங் கீர்த்திகள் மங்காதின்றளவு எங்கும் பரவலாயின.

இவர்களுக்குள்ள இவ் அரிய முக்குணங்களையும் தனித் தனியே எடுத்து அக்காலத்துள்ள தென்வீகச் செப்தமிழ்ப்புலவ சிரோன்மணிகளால் புகழ்ந்திருக்கும் சங்கமருவிய பன்னூல்

களைப்படித்தோர் வியப்படையாதிரார்கள். இவ்வீரமன்னர்கள் போர்க்களத்திற் சென்று போரிழைக்கும்போது தங்கள் மார்பி னும் முகத்தினும் பட்டுவரும் புண்களை வீரப்பிரதாபம் பாராட் டிப் போற்றிவருவார்கள் என்பது ஒருதலை. அங்ஙனம் போரி ழைத்து முன் புண்படாத நாள்களை யெல்லாம் பயனற்ற நாள் களாகவே கருதுவாரென்பது தோன்ற, (விழுப்புண்படாத நாள்களையெல்லாம் வழுக்கினுள் வைக்குந் தன்னுளை யெடுத்து) என்றார் நாயனாரும். இன்னும் இவர்கள் மார்பினும் முகத்தி னும் பட்டுள்ள புண்கள் எவ்வளவோ அவ்வளவுக்குந் தங்கள் வீரத்தன்மையை விளக்குவனவாக வெண்ணப்படுவர்களென் பது புலனாக விக்கிரம சோழவரசனை யோர் புலவதிலகர் புகழ் ந்தெழுதிய உலாவில் மார்பினிற் றொண்ணூற்றியாறு புண் கொண்டவென்றிப் புரவலன் என்று வியப்புறக் கூறியதை நோக்கப் பேரழகேயாகும்.

அன்றியும் பெருஞ்சேரலாதன் என்னும் ஓர் அரசன் சோழனுடன் யுத்தம் புரியும்போது அச்சோழன் விடுத்த அம் பானது அச்சேரலன் மார்பிற்றாக்கி யூடுருவிப் பின் முதுகின் வழியாகச்சென்று விட்டது அதனால் அப்பெருஞ் சேரலாதன் என்னும் அரசனுக்கு முதுகிற் புண்ணுண்டாகிவிட அப்புறப் புண்ணிற்கு அவ்வரசன் நாணினவனாய்த் தன் உடவாளைக் கொண்டு தற்கொலை புரிந்துகொண்டனனும். இவ்விடத்தி லிந்தி யர்களின் வீரமெவ்வளவு மதிப்பாக வெண்ணவேண்டியதிருக் கிறது. இன்னும் இச்சேரலன் இன்னகாரணத்தாலுயிர் துறந் தன னென்று தெரிந்துகொண்ட அவன் படைகளும் தம்மரச னைத் தனியே செல்லவிட்டுத் தாங்கள் மட்டுமிங்கிருப்பது வீரத் தன்மையென்றென அந்த நேரமே தங்கள் தலைவன் சென்ற விடத்திற்குத் தாங்களும் செல்லவெண்ணினவர்களாய்அரசனைப் போலவே தற்கொலை அவரவர்களும் செய்து உயிர் நீங்கின ரென்றது சரிதம். இதனைநோக்க இந்திய படைகளுக்கு வீரத் திலிருக்கும் விருப்பமும் ராஜவிசுவாசமும் யாவரும் எடுத்துக் கொண்டாடத் தக்கதா யிருக்கின்ற தன்றோ.

யுத்தகளத்தில் ராவணன் நிராயுதபாணியாக நின்று விட் டதைக்கண்டு கருணையங்கடலாகிய ஸ்ரீ ராமபிரானார் அவனைப் பார்த்து இன்றையதினம் உனதில்லத்திற்குப்போய் நாளைய

தினம் உனக்குள்ளபடைத்துணையுடன் யுத்தத்திற்கு வருவா யாகவென்று அன்றைய யுத்தத்தைநிறுத்திப்பகைவனைப் பார்த்துப் பகவான் இன்றுபோய் நாளைவாவென்றனுப்பின ரென்றால் இங்கு யுத்தகளத்தில் தயையும் நீதியும் தியாகமும் கொண்டதாய் விளங்குகின்றது. இங்ஙனமே சிறந்தசிவனடியார்களிலொருவராகிய ஏனாதி நாத நாயனார் அதிசூரனென்ற ஒருவனுடன் வாட்போர் புரிய இவன் நாயனாரை வெல்லவலியிலனாய் வஞ்சகமொடு விபூதி தரித்து மறைந்து வந்துத் தோன்ற நாயனார் பார்த்து அவனெண்ணத்திற்கிணங்கி வாளையும் பரிசையையும் நாவிட்டுநின்றுவிட வெண்ணிய அந்நாயனார் நிராமயரைக்கொன்றதோஷம் பின் அச்சூரனைச் சேராதிருக்கவேண்டு மென்று எண்ணியபடி அவ்வாயுதங்களைக் கைவிடாது எதிர்ப்பவர் போல நேராக நிற்க, அப்பாதகனால் வெட்டுண்டிறககப்பட்டனர் இதைக்கருதவும் யுத்தகளத்தில் அத்தருமமும் தயையும் நீதியும் பிரதிபலிக்க விளங்குவதறியலாம். இங்ஙனமே யுத்தத்தில் பகவான் கண்ணபிரானுக்குக் கர்ணன் யுத்தகளத்தில் தருமத்தைத் தத்தம் பண்ணியதும் வீரத்தியாக மேயாகும்.

இவ்வாறே அக்காலத்தில் இந்தியர்கள் வீரச் சுவையிலேயே நோக்கமிகுதியு முடையவர்களாய்த் தங்கள் தேசதருமத்தை விடாது நடத்திக் காலங்கழித்து வந்திருக்கின்றார்கள் அத்தகைய இந்தியர்கள் ஐரோப்பியராளுகையின்கீழ்வந்தகாலமாக சுதந்தராபாதகர்களாகி அத்துடன் ஆயுதச் சட்டமொன்று பிறந்து அது அமுலுக்குவரவே அந்தநாள் முதல் இந்தியர்களுக்குள்ள வீரங்கள் நாளுக்குநாள் குறைந்து வரலாயின. அங்ஙனமிருந்தும் தற்போது ஐரோப்பாவில் நடக்கும் மஹாயுத்தத்திற்கு ராஜாங்கத்தார் கோராமலே தாங்களே பெருங்காயமிருந்த பாண்டமபோல் புராதன வீரத்தன்மையின் குணவிசேஷததால் ராஜ பக்திக்காக ஐரோப்பாவிற்குச் சென்றுயுத்தகளத்தில் நம் இந்தியப்படைகள் காட்டிவருஞ் சௌரியங்களும் தந்திரங்களும சாமர்த்தியங்களும் சொல்லுந்தரமல்லவாமென்று பல பிராஞ்சு ஆங்கில பத்திரிகைகளெல்லாம் விஸ்தாரமாய்ப் புகழ்ந்து எழுதப்பட்டு வருகின்றன. இதற் கொத்தபடி இப்போது பொதுமஹா ஜனங்களுக்கெல்லாம் தோன்றி யிருக்கும் அபிப்பிராயத்தைத் தழுவி ஒருவகையான திருத்தங்கள் செய்து ராஜாங்கத்தார் இந்தியர் மனதுக்கு இன்னும் உத்சாகத்

தைத் தருவார்களானல் பூர்வவீரத்தன்மை ஜெனித்து இது போன்ற சந்தர்ப்பங்களில் குதூஹலமாக துரைத்தனத்தார் பிரயாசையின்றி யெண்ணற்ற இந்தியப் படைகள் சேரக்கூடுமென்னலாம்.

அக்காலத்து அரசர்க்குள்ள இந்தியப் படைகளின் பெருக்கஞ் சொல்லவந்த விடத்தில் எண்ணிக்கைக்கு அடங்குவனவாயில்லாதது பற்றி அப்படையை முதற்படை இடைப்படை கடைப்படையென மூவகையாகப் பிரித்து அவை செல்லுகையில் முதற்படை பனையின் நுங்கை யுண்பதும் இடைப்படை எஞ்சியகாய்ப் பழமாக அதையுண்பதும் கடைப்படை உண்ட பழத்தின் கொட்டையில் முளைத்த கிழங்கை யுண்பதும் ஆகிய அவ்வளவுகாலம் வரைக்கும் செல்லுமென்று கூறப்படுகின்றது ஜன விருத்தியில்லாத அக்காலத்திலேயே இவ்வளவு படைகள் அரசருக்குச் சேர்ந்ததென்றால் விசேஷ ஜனவிருத்தியா யிருக்கும் இக்காலத்தில் எவ்வளவுதாம் நமது அரசருக்குப்படை சேரவேண்டுமென் றெண்ணலாம். இந்திய வரசர்கள் அவ்வளவு படைகளுக்கும் சம்பளங்கொடுத்துச் சேர்த்து வைத்திருப்பார்களென்று நாம் நினைப்பதற்கில்லை. அவர்களுக்கு அக்காலத்திருந்த தேச சுதந்தர சுமத்துவ சகோதரத்தவ பாக்கியத்தால் அரசன் குறிப்பறிந்து தேசபாத்திய முன்னிட்டு ராஜவிசுவாசங் கொண்டு குடிகளெல்லாம் சமயத்தில் படைகளாகவந்தவர்களாய்ச் சொல்லவேண்டும் அப்படியே இப்போதும் அனேக இந்திய குடி படைகள் இராஜபக்தி கோறி யுத்தத்திற்குச்செல்ல முன்வந்தார்கள் முன் வருகின்றார்கள் முன் வர விருக்கின்றார்கள்.

இந்தியர்கள் சத்தியமும் நீதியும் ராஜபக்தியும் நிறம்பக் கொண்டவர்கள் தினையளவு நன்றிசெய்தாலும் பனையளவாக் கொண்டு மிகுதியும் விசுவாசம் பாராட்டதக்கவர்கள்இப்போது ஐரோப்பா யுத்தத்திற் சென்று வேற்றுமையும் வெறுப்பு மின்றி நமது அரசாங்கத்துப் படையுடன் கலந்து போர்செய்து எதிரிகளைச் சின்னபின்னப் படுத்தப் புறங்காட்டும்படிச் செய்து வரும் இவ்யுத்தமே இவர்களின் வீரத்தி னிலைமையும் ராஜவிசுவாசமும் இத்தன்மைத் தென்று விளக்கவந்த தென்னலாம்.

பொறுமையே சிறந்த பூஷணம்.

சிருஷ்டி கர்த்தாவாகிய நான்முகதேவனால் படைத்த இப் பிரபஞ்சத்தின் கண்ணுள்ளயாவரும் ஒழுக்கம், நல்லறிவு, இரக்கம், தயை, பச்சாத்தாபம், அன்பு முதலியவைகளைத் தரவல்ல பொறுமையை நன்குகடைப்பிடித்து வாழ்வதே அறிவோர் கடமையாம். அப்பொறுமையானது கடலினும் பெரிதாமென நமதான்றோர் கூறியிருக்கின்றார்கள். தற்காலத்திலோ பொறுமை என்பதற்குமாறாக "பொறுமை"யை மேற்கொள்வோர் பெரும்பாலுமாக இருக்கின்றார்கள். எவ்வாறெனில். யாவரேனும், கல்வி, செல்வம், தொழில் முதலியவைகளிற் சிறந்து நன்கு மதிக்கப்பட்டவர்களா யிருப்பார்களாயின், அன்னோரைப்பார்த்து: ஆ! ஆ! என்ன அநீதம்! இவனென்ன கல்வியில் கனபண்டிதனாயிருக்கின்றானே! செல்வத்திலும் நல்ல தொழிலிலும் வல்லவனாகச் சிறந்து விளங்குகின்றானே யென்றும், அடடா! இவனும் தனவந்தனாகலாமோ! ஜகமெய்ச்ச வாழலாமோ! ஐயோ இவன் கெட்டுப் போகமாட்டானோ! இவனைக்காட்டிலும் நாம் மேன்மையாக வாழமாட்டோமா! என்று பொறாமை கொள்ளும் புல்லறிவாளரில் அநேகம் பேரைப் பார்த்திருக்கின்றோம். எவ்வளவாகப் பொறாமையடைந்தபோதிலும்: யாது பிரயோசனம்? ஒருவனைப்பார்த்து ஒருவன் பொறாமைகொண்டு துக்கிப்பதால் பலவித நோய்களுக்குத்தான் ஆதாரமாகுமே தவிர வேறொன்றுமில்லை. "புண்ணியவசத்தினால் செல்வமதுவரவேண்டும் பொருளை ரக்ஷிக்க வேண்டும்" என நமதான்றோர் நல்லுரைபகர்ந்துள்ள மேற்கோளுக்கிணங்க, தத்தம் பூர்வஜன்ம புண்ணியவசத்தாற் கிடைத்த பொருளென நினைப்பதுமில்லை. "புலியைப்பார்த்து பூனை சூடிய" வாறு தாமும் பேராசைகொண்டு புலம்புவதாற் காரியமென்ன? ஒன்றுமில்லை. அன்றியும், சாதாரணமாக ஒரு குடும்பத்திலுள்ள சகோதரருள்ளும், ஒருவர்க்கொருவர் நிரம்பவும் பொறாமையே கைக்கொண்டவர்களாருக்கின்றார்கள். அங்ஙனமாக ஒருவன் தனவானாக இருந்தால் அஃது மற்றவனுக்குப் பெருமைதானே யென்று நினைக்கின்றார்களில்லை. அதாவது: நான்குபேர் சகோதரர்களாயிருந்து அவர்களுக்குப் பொதுவாய் 16 அடிகொண்ட ஒருசிறு குடிசையிருந்தாலும், அதையும் அவர்கள் நான்கு பாகம் செய்துகொள்ள விரும்பு

கிறார்களே தவிர யாராயினு மொருவர் அக்குடிசையிலிருந்து வந்தாற் போதுமென நினைப்பதில்லை. இன்னோருக்கு நற்புத்தி போதித்து ஒற்றுமையுடன் வாழச்செய்து கண்ணுற் பார்க்க வேண்டுமென்று தாய், அல்லது தந்தையாகியவர்கள் கொஞ்சமும் கவனிப்பது மில்லை. சிலபோவிழக்களைப்பார்த்து, தாமும் அவ்வாறே தனித்துவாழவிரும்புகின்றார்கள். இப்படிப் பட்டவர்களைப் பயந்த தாய், தந்தையாரோ (தன்மக்களில்) ஒருவன் பக்கமே சேர்ந்துகொண்டு, "எரிகிற நெருப்பில் நெய்யை யூற்றியது" போல ஒருவனைத்தூண்டி மற்றவரை உதாசனித்து (கௌரவரும் பாண்டவரும் குருக்ஷேத்திரத்தில் பெரும் போர் புரிந்தவாறு) கோபமூட்டிவிட்டு, ஒற்றுமையின்றி ஒவ்வொருவரையும் வெவ்வேறாக்கி தனித்து வாழச்செய்து விடுகின்றார்கள். இதனால் இவர்கள், கண்டோர் நகைக்கும்படி குடும்பத்தைச் சிதறவிடுத்து காலந்தள்ள நேரிடுகின்றது. இவர்கள் இப்படி நடப்பதால் இவர்களது குடும்பம் "அரசனில்லாப் பட்டணம்போல" வென்று யாரைக் கேட்கலாம்? இத்தகைய வேறுபாடுகளுக்கெல்லாம் அக்குடும்பத்தலைவராகவுள்ள முதியோரே காரணராகின்றார்களல்லவா? ஒவ்வொருவருக்கும் தத்தம் வினைவசத்திற்கேற்ப* சர்வலோக ரக்ஷகனாகிய பரமேஸ்வரன் படியளக்கின்றார். அவை சொற்பவரும்படியாயிருந்தாலும் அதிகமாயிருந்தாலும் (சமுத்திரமானது பெரிய நதிகளையும், மிகவும் கால்வாய்களையும் வேண்டாமென்று மறுக்காமல் எப்படி ஏற்றுக்கொள்ளுகிறதோ அப்படிப்போல்) அவ்வரும்படியைச் சிறிதும் தளர்வின்றி ஏற்று நிரப்பிக்கொண்டு காண்போர்களுக்கு கௌரவமாகக் குடும்ப பாரத்தை நிர்வகிக்கவேண்டும். இக்காரணம் பற்றியே "சமுசாரம் சாகரம்" எனவும் "குடித்தனமோ துரைத்தனமோ" எனவும், மேலோர் கூறியிருக்கின்றார்கள். ஆகையால், இவற்றிற்கெல்லாம் முக்கியகாரணம் பொறுமைமிகுந்த பெரியோர்களேயாம். சிற்றறிவுடையவர்கள் பொறாமை மேலிட்டு நல்லோரையும் கெடுக்கமுயலுவார்கள்.

மேலும், தெய்வத்தன்மைத் திருவள்ளுவ நாயனாரும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

எனக் கூறியிருக்கின்றார். அதாவது இப்பரதகண்டத்தின் கண் இல்லறமுறைமை எவ்வாறு அவ்வாறு உலகத்தில் வாழ்

பவன் மானிடஜெனனம் எடுத்தபோதிலும், அவன் வானுலக மென்னும் தேவலோகத்தில் வசிக்கும் தேவர்களில் ஒருவனுக மதிக்கப்படுவான் என்பதாம். இத்திருவாக்கியமானது ஆண், பெண் இருதிறத்தாருக்கும் கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டும். ஏனெனில் ஒரு குடும்பகர்த்தாவாக விளங்குபவர், மேற் கூறியவைகளைச் சிறிதும் கவனியாது சொற்பசம்பாத்தியமுள்ள வொருவன் ஒரு குடும்பத்திலிருந்தால், அவனைப் பலவாறு தூறிச்சினந்து அவனைத் தனித்திருக்கச்செய்து காண்போர் கனங்குறையப் பேசும்படி இடந்தருகின்ருர்கள். ஏன் அப்படி செய்யவேண்டும்? பொருமை மேலிட்டதாலல்லவோ? மேலும் நல்லறிவில்லாமை என்றுங் கூறலாம். இது நன்மை, இது தீமை யென்றறியும் பகுத்தறிவை கடவுள் நமக்கு கொடுத்திருக்கின் ருர். அவ்வறிவை, பொருமை யென்னுஞ் சேற்றிலழுந்த விடாமல் மெய்ஞ்ஞான தீபமாகிய விளக்கிஞல் பிரகாசிக்கச்செய்து பொறுமை என்னும் திருவாபரண மணிந்து வாழ்தலே நல்லோர் குணமாகும்.

"ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியிற்
பாவியென்ற நாமம் படையாதே மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே,
(நீ) செத்தாரைப் போலே திரி"

என்று கூறிய மூதுரையின் படி நீர்மேலெழுத்தாகிய இப் பொய்வாழ்க்கையை நீங்கிப் பரகதியடையும் வரையிலும் "பொல்லாத பாவி" என்றும், "துரோகி" என்றும் கெட்ட பெயரெடுக்காமல், நற்பெயர்கொண்டு முத்தி வீடு பெறுவார்களாக. இதனை விரிக்கிற் பெருகுமென இம்மட்டோடு நிறுத்தி மறுமுறை எழுதுவோமாக.

சுகுணசுந்தரன்.

கௌரீ விஜயம்

(367-ம் பக்கத் தொடர்ச்சி.)

காட்சி - 2.

இடம்: கைலாஸபர்வதம் (பார்வதியும் பரமசிவனும்.)

பார்வதி:—ப்ராண நாதா! தாங்கள் இன்னும் பேசாமல் இருக்கிறீர்களே! தங்களுடைய பக்தரான விருபாக்ஷர் காட்டில் தங்களைக் குறித்துக் கடுந்தவம் செய்கிறாரே! அவருடைய தபோக்கினியானது இக்கைலாஸத்தையும் எரிக்கும்போலிருக்கிறதே! அத்தவத் தீயைத் தமது அருள்நீரால் அவிக்கக் கூடாதோ? விருபாக்ஷர் செய்யும் அகோரமான தவத்தினால் பூமியும் பர்வதங்களும் நிலைகுலைந்து நடுங்குகின்றன. கடல்களும் நதிகளும் கொந்தளிக்கின்றனவே! அவர் மூச்சையடக்கிக் கும்பகஞ் செய்யும்பொழுது தேவர்களெல்லாம் மூச்சுவிட முடியாமல் தவிக்கின்றனரே! தங்களை எப்பொழுதும் மறவாமல் ஸ்மரித்துக்கொண்டிருக்கும் விருபாக்ஷருக்கு ஏன் பிரத்தியக்ஷமாகிக் காக்ஷி கொடுக்கக்கூடாது?

பரமசிவன்:—கண்மணீ! பார்வதீ! நீ சொன்னதற்கும் நான் மறுப்பேனோ! விருபாக்ஷர் பக்தனென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அவன் முற்பிறப்பில் செய்த தீவினைகள் தேய்வதற்கு இன்னும் கொஞ்சகாலம் போகவேண்டும். பிறகு நாம் பரிவாரங்களுடன் தபோவனத்திற்குச்சென்று விருபாக்ஷருக்குக் காக்ஷி கொடுத்து, அவருடைய .குறையை நீக்குவோம். நாம் இங்கு வந்துள்ள பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்க வேண்டும். வா, போவோம்.

பார்:—ஆர்ய புத்திரா! இதோ வந்துவிட்டேன்.

(இருவரும் போகின்றனர்.)

காட்சி - 3.

இடம்: தபோவனம். (விருபாக்ஷர் பிரவேசிக்கிறார்.)

விரு:—(தனது முன்பு பரமசிவன் பார்வதியுடனும் பரிவாரங்களுடனும் பிரத்தியமாயிருப்பதைக்கண்டு எழுந்து, கைகூப்பி, வணக்கத்துடன்) ஆதியே ஜ்யோதியே! மணியை அணியாகக் கொண்டவனே! மணியின் ஒளியே! அமரர்சிகாமணியே! ஆனந்தத்தாண்டவம் புரிந்த ஐயனே! திருநீறணிந்த

மெய்யனே! ஈராறு கையனைப்பெற்ற துய்யனே! வேண்டுவோர் வேண்டுவதை ஈவோனே! நமஸ்காரம்! என்னை ரக்ஷிக்கவந்த எம்மானே! மாதவர்போற்றும் மகாதேவனே!

"பொன்னை மாதரைப் பூமியை நாடிடே
னென்னை நாடிய வென்னுயிர் நாதனே
யுன்னை நாடுவ னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே."

மிருகண்டுமாமுனியின் மைந்தனுக்கு மண்ணுள்ளளவும், விண்ணுள்ளளவும், காருள்ளளவும், நீருள்ளளவும் அழியாத பதினாறு வயது வாலிபத்தைக்கொடுத்த கருணைக்கடலே! நமஸ்காரம்! கொழுத்த சிங்கத்தைப்போன்ற தக்கனை அழித்தோய்! காமி ஜனங்களைத் துன்பப்படுத்தும் காமனை நேத்திராக்கினியால் தகித்தவனே! காளகூட விஷத்தைப் புசித்தோய்! யான் செய்த தவத்தின் பலனை இன்றுதான் பெற்றேன். அடியேனைக் காப்பாற்ற வேண்டும்.

பரமசிவன்:—விருபாக்ஷ! உமது தவத்தைக்கண்டு மகிழ்கிறோம். உமக்கு வேண்டும் வரத்தைக்கேளும்! கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். தடையில்லாமல் - தெரிவியும்!

விரு:—(அஞ்சலி பந்தத்துடன்) காண்பதற்கரிய கடவுளே! அடியேனை இவ்வாறு பரிசோதிக்கலாமோ? தாங்கள் அறியாததும் உண்டோ? எனக்குத் தங்களுடைய கிருபையினாலேயே எல்லாவித சம்பத்துக்கள் இருந்தும் எனது ஜன்மத்தைக் கடையேறும்படி செய்யவல்ல புத்திரசம்பத்து இல்லாததால் என்மனம் வருந்துகின்றது. ஆனதால் எனக்கு புத்திரச் செல்வத்தைத் தந்தருளுமாறு பிரார்த்திக்கிறேன் என்பேரில் கிருபை கொள்ளவேண்டும்.

பரமசிவன்:—பிராமணோத்தமரே! உமக்குப் புத்திர சந்தானம் கிடையாது நீர் முற்பிறவியில் அதற்கு வேண்டிய ஸத்கருமருங்களைச் செய்யவில்லை. ஆனால் ஓர் ஸத் புத்திரிமாத்திரம் உமக்கு உண்டாகும்படி அநுக்ரஹித்தோம். இம்மதுரமான மாம்பழத்தை எடுத்துக் கொண்டுபோய் நீரும் உமது மனைவியும் புசித்தால் உங்களுடைய பாவங்களெல்லாம் போய்விடும் பின்பு உங்களுக்கு ஓர் அழகிய புத்திரி உண்டாவாள்.

(பரமசிவன் மாம்பழத்தைக் கொடுத்துவிட்டுப்
பரிவாரங்களுடன் மறைகின்றார்.)

விரு:—(தனக்குள்) பரமசிவன் கருணையை என்னென்று சொல்வது! அற்பனாகிய எனக்குக்காக்ஷி கொடுத்தருளினாரே! அதிக ஆசைகூடாது. பகவான் எனக்குப் புத்திரச்செல்வத்தை யளிக்காமல் பெண்ணையளித்தாலும், அதைக்கொண்டே என் மனம் பெரிதும் மகிழ்கின்றது. இப்பழத்தை சுப்பிரதையிடம் கொடுத்துச் சரிபாதியாகப் புசிப்பேன் இனி என் வீட்டிற்குச் செல்வேன். (போகின்றார்.)

இரண்டாமங்கம் முடிந்தது.

மூன்றாமங்கம்.

காட்சி - 1

இடம்: சுந்தரியின் வீடு.

(சுந்தரியும் ஜானகியும் பிரவேசிக்கின்றனர்.)

சுந்தரி:—வாடியம்மா ஜானகி! உன்னை இரண்டு மூன்று நாட்களாகக் காணவில்லையே! என்மீது ஏதாவது கோப முண்டோ?

ஜானகி:—இல்லேடி. நேற்று நான் வந்தேன். அப்போது உன்கணவர் இருந்தார் இது பேசுவதற்கு சமயமில்லையென்று போய்விட்டேன்.

சுந்தரி:—அவரிருந்தாலென்ன! நேற்று லக்ஷ்மிகூட வந்திருந்தாள். இன்றைக்கும் வருவதாகச் சொல்லியிருக்கிறாள். இப்பொழுது வருகிறசமயம்தான்.

ஜானகி:—ஏன்? விசேஷம் ஏதாவது உண்டோ?

சுந்தரி:—விசேஷமொன்றுமில்லை. பொழுதுபோவதற்காகப் பேசிக்கொணடிருப்போமென்று தான். என் கணவர் வீட்டிலிருந்தால் நீ வந்து பேசக்கூடாதா? அவர் உன்னைப்பிடித்து இழுக்கிறாரா, என்ன?

ஜானகி:—இல்லேடியம்மா! உன் கணவர் மிகவும் பெரியவர். அவர் இருக்கும்பொழுது பேசுவதற்கு நாணமாயிருக்கிறது.

சுந்தரி:—ஓகோ! இளம்புருஷர் இருக்கும்போது பேசலாம் கிழவனார் இருக்கும்போது பேசக்கூடாதோ? 'வித்தாரக்கள்ளி விறகுக்குப்போனாளாம், கற்றாழை முள்ளு கொத்தோடே தைத்ததாம்.' எல்லாம் விநோதம்தான்.

M. M. நாராயணசாமி அய்யர்.

இருமல்ரோகம்

(362-பக்கத்தொடர்ச்சி)

முயல் நெய்.

அயல்காணு முயலொன்று பிடித்து வந்தங்
கப்பனே கால்தலையுங் குடலும் போக்கே. (1.)
குடல்போக்கி நாலுபத்துப் பலந்தான் றாக்கிக்
குமுறவே யிடித்துமொரு பாண்டத் திட்டிங்
கடலுடனே முக்குறுணி ஜலமும் விட்டிட்
டப்பனே நாலொன்ருய்க் குறுக்கி நீயும்
விடலுமுயர் தொடைச்சாற் குறுணி விட்டு
வெள்ளாவின் பாலுமறு நாழி விட்டு
நடலாவி னெய்யுமிரு நாழி விட்டு
நாட்டிடவே மேல் மருந்தைச் சொல்லுவேனே. (2.)
சொல்லுவேன் திப்பிலியு மதனின் மூலம்
சிக்குடைய கடசிங்கி சித்திர மூலம்
செல்லுமாஞ் சிறுதேக்கு குரோசாணி யோமம்
செவ்வியமிரு சீரகமுங் கிராம்பு தானும்
வெல்லுமே சடாமாஞ்சில் கடகரோ கணியும்
மிளகு கோஷ்டம் யிந்துவாலுழுவை யரிசி
அல்லவே முந்திரிகை யேலம் லவங்கம்
அதிவிடய மரத்தை யத்தித் திப்பிலியுந்தூக்கே. (3.)
தூக்கடா கழஞ்சிரண்டு பாவி லாட்டுச்
சொல்லுவேன் பெருவாகை பெருங்குமிழ முன்னை
ஆக்கமுறும் பத்திரியுங் கண்டங் காரி
யப்பனே சிற்ருமல்லி பேராமல்லி
தேக்கடா கூவிளகும் நெருஞ்சி ருனும்
சிறியவழு தலையுமிவை சமூலங் கூட்டித்
தாக்கடா தூதுவளை யமுக்கரா வேர்
சங்கம்வேர் திப்பிலியு மிளகும் பாரே. (4.)
பாரப்பா மஞ்சளொடு தேவ தாரம்
பருவரத்தை வகைக்கங்கே பலந்தான் மூன்று
சேரப்பா தூளாக்கித் தூணி நீரில்
செப்பமுட னொன்ருய்க் குறுக்கி வாங்கி
ஆரப்பா விவையெல்லா மொன்ருய்ச் சேர்த்தே
யடுப்பேற்றிப் பூசைசெய் தனலை மூட்டிப்
போரப்பா மூன்றுநா ளூறவைத்துப்
புகழாக நாலாநாள் வடித் திடாயே. (5.)
வடித்துவைத்து நெய்யிலே கழஞ்சு தூக்கி
மைந்தனே யரைக்கழஞ்சு தேனும் விட்டு

படித்தரமாய்த் திப்பிலியின் பொடிமேற் றாவிப்
பாங்காக வுடம்பறிந் திருநேர மூட்டு
நொடிக்குமுன்னே நோய்களறும் வச்சிரதேகம்
நுணுக்கந் தொண்ணூற்ற்று க்ஷயமுந் தீரும்
கடித்தவாய் துடைத்தாற் போற் பிணிகளேகும். (6.)

1. ஒரு முதிர்ந்த முயலைப் பிடித்துவந்து கால், தலை, குடல் இவைகளை நீக்கித் தோல்போக்க வேண்டும்.

2. அவ்வாறு நீக்கின முயலின் இறைச்சி எலும்புட்பட நன்றாய்ச் சேதித்து 40-பலம் நிறுத்து ஒரு பெரிய மட்பாண்டத்திலிட்டு மூன்று மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி நாலுக்கொன்றான 6-படியாகக் குடி நீர் காய்ச்சி வடிகட்டி அதில் ஆடாதோடைச் சாறு ஒரு மரக்கால், வெள்ளைப்பசுவின் பால் ஆறுபடி, பசுநெய் 2-படி விடவேண்டும் (இனிமேல் மருந்தைச் சொல்லுவேன்.)

3. அரிசிதிப்பிலி, திப்பிலிக்கட்டை, கடுக்காய்ப்பூ, சித்திர மூல வேர்ப்பட்டை, கண்டு பாரங்கி, குரோசானியோமம், செவ்வியம், சீரகம், கருஞ்சீரகம், லவங்கம், சடாமாஞ்சில், கடுகுரோகணி, மிளகு, கோஷ்டம், இந்துப்பு, வாலுழுவை யரிசி, திராட்சைப்பழம், ஏலரிசி, லவங்கப்பட்டை, அதிவிடயம், சந்நராஷ்டம் ஆனைத்திப்பிலி ஆகிய இவைகளும்.

4. வகைக்கு இரண்டு கழஞ்செடை ($2\frac{3}{4}$-வராகனெடை அதாவது நால் பலமாக) எடுத்துப் பசும்பால் விட்டரைத்து அதில் கலந்து விடவேண்டும்.

பிறகு, பெருவாகை, பெருங்குமிழ், பசுமுன்னை, தாளிசபத்திரி, கண்டங்கத்திரி, சிற்றாமல்லி, பேராமல்லி, வில்வம், சிறுநெருஞ்சில், சிறுவழுதலை இவைகள் சமூலமாகவும், தூதுவளை வேர், அமுக்கனுங்கிழங்கு, சங்கம்வேர், திப்பிலி, மிளகு ஆகிய இவைகளும்,

5. கறிமஞ்சள், தேவதாரிசக்கை, பேரரத்தை ஆகிய இவைகளும் வகைக்கு மும்மூன்று பலமாக எடுத்து இடித்துத் தூளாக்கி ஒரு பாண்டத்திலிட்டு அரைமரக்கால், தண்ணீர் விட்டு நாலுக்கொன்றாகக் குடி நீர் காய்ச்சிமுன்கஷாயம், பால், சாறு, நெய் ஒன்றாய் ஊற்றியிருந்த பாண்டத்திலூற்றிக் கலந்து மூன்றுநாள் வரைக்கும் சிறுக எரிக்கவேண்டும்.

6. நாலாவது நாள் காலையில் பக்குவம் பார்த்து வடித்து வைத்துக்கொண்டு, காலை மாலை இரண்டு வேளையும், வேளை ஒன்றுக்கு 1-கால் வராகனெடை நெய் எடுத்து அத்துடன் அரையே அரைக்கால் வராகனெடை தேன் கலந்து அத்துடன் திப்பிலி பொடி மேல்தூவிச் சாப்பிட்டு வந்தால் சீக்கிரத்தில் தொண்ணூற்ற்று க்ஷயமும் அதில்சேர்ந்த நோய்களும் நீங்கும் சரீரம் வச்சிரம் போன்றதாகும். மா. வடிவேலு முதலியார்.

கலாசிந்தாமணியின் மூன்றாவது ஆண்டு நிறைவு

எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளால் நமது
சிந்தாமணியின் மூன்றாம் ஆண்டு முட்டின்றி முடிந்தது. ஐ
ப்பிய யுத்தத்தின் மும்முரத்தால் காகிதம் முதலியன ப
ங்கு விலையேறியும் சிலசமயம் காகிதம் கிடைப்பது அரிதா
பல விதங்களில் இவ்வாண்டில் நாம் கஷ்டப்பட வேண்டி
யிற்று. இக்காலத்தில் பல பத்திரிகைகள் தம்முடைய ச
விகிதம் உயர்த்தியும் பிரசுரங்களில் இரண்டொரு மாதம் சே
தும் வெளியிட நேர்ந்தும் யாம்கொண்ட கருமத்தில் ஒரு
தும் தயங்குறாது ஒரே நோக்கமாய் எப்பாடெல்லாமோ ப
மாதந்தோறும் பத்திரிகை தவறாது பிரசுரமாகவும், காலந்
க்காது வெளிவரவும், விஷயங்கள் உயரியதாகக் காணவும்
தோம். இதுவரை பழய சந்தாவுக்கே உழைத்து ரு
மன்றி ஒரு அணாவேனும் உயர்த்தினேமில்லை. ஆதிய
எக்கருத்து பற்றி இதை ஆரம்பித்தோமோ அதற்கு
படாவண்ணம் நடந்து கொள்வதில் யாம் இதுவரை பட்
மங்களுக்கு எல்லையேயில்லை. இவ்வாறெல்லாம் பலகஷ்ட
டங்களுக்கும் உள்ளிட்டு உழைத்து வரும் எமது ஊழிய
நமது சந்தா நேயர்கள் அறிந்தார்களானால் அதுவே ெ
சிரம பரிகாரமாகக்கொள்வோம். எமது கஷ்ட நஷ்ட
நமது சந்தா நேயர்கள் அறிந்தார்களென்பதற்கு அத
யாவது ஒவ்வொரு சந்தாதாரரும் அடுத்த புது வருஷ
ஒவ்வொரு நண்பரையேனும் புதிதாகச் சேர்த்துத் த
ளானால் அதுவே அவர்கள் நமது கஷ்ட நஷ்டங்களை உ
தாகும். தவிர காகிதம் முதலிய பல கஷ்டங்களுக்கு உள்ள
ருக்கும் இக்காலத்தில் சமயமறிந்து உதவுவதன்றோ
புடையதாகும்.

கடந்த சஞ்சிகையில் யாம் கேட்டுக்கொண்டபடி சில
பர்கள் புதிய சந்தாதாரர்களை சேர்த்தனுப்பியுள்ளனர் ்
இம்மாதம் சேர்த்துத் தருவதாக எழுதியுள்ளனர் சிலர் இ
12-வது ஸஞ்சிகையே வி பி. யனுப்ப உத்திரவு அளித்துள்
ளர் இவர்களுக்கெல்லாம் யாம் வந்தனம் புரிகிறோம். காகி
இக்காலத்தில் மொத்தமாய் வாங்கவேண்டுமாகலின் அடு
பத்திரிகை வி. பி. வரும்போது காலதாமதம் செய்யா
உடனே பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம். இச்சம
யார் எவ்விதமாக உதவிபுரிய முடியுமோ அவ்வாறெல்
உதவிபுரிந்து பத்திரிகையை மேம்படுத்துவார்களாயின் ந
ிந்தாமணியை இவ்வருஷத்தைக்காட்டிலும் அடுத்தவருஷத்
புதிய திருத்தங்களோடு நடத்தப்பெறுமென்பது திண்ண
து நண்பர்கள ஒவ்வொருவரும் கவனிப்பார்களாக.